| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| சா. சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – **600 006.** | அனைத்து முதன்மைக் கல்விஅலுவலர்கள்<br>மற்றும் இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி. |

**ந.க.எண். 021880 /F1/2021** **நாள் : 01 .04 .2022**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மே **2022** – மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அக மதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை (Internal Marks) இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் தொடர்பான அறிவுரைகள் – அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அனுப்பக் கோருதல் – தொடர்பாக

-----

மே **2022,** மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களுக்கு, பள்ளியில் வழங்கப்பட்ட அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள் மற்றும் அறிவுரைகள் குறித்தான சுற்றறிக்கை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

அதனை, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பி வைத்து, உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: சுற்றறிக்கை

ஒம்/–
இயக்குநர்

நகல்

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
   – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
   – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்

**அரசுத் தேர்வுகள் இயக்ககம்,**
**சென்னை – 600 006.**

**ந.க.எண். 021880/ F1 / 2021** **நாள் : 01.04.2022**

**<u>சுற்றறிக்கை</u>**

**பொருள் :** மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் மே 2022 – மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை (Internal Marks) இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் – அறிவுரை வழங்குதல் **–** தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (2டி) எண்: 50, பள்ளிக் கல்வி(அ.தே.1)த் துறை, நாள்:09.08.2017.
2. அரசாணை (2டி) எண்.13, பள்ளிக் கல்வி(அ.தே.1)த் துறை, நாள்:20.02.2018.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.021880/F1/2021, நாள்.02.11.2021.

*****

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு, 2021 – 2022 கல்வியாண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு பள்ளியில் வழங்கப்பட்ட அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவேண்டும்.

**1. அகமதிப்பீட்டிற்கான பாடக் குறியீடுகள்**

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களது அகமதிப்பீட்டு மதிப்பெண்களை பதிவு செய்வதற்கு ஏதுவாக, ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாடக் குறியீடுகள் (+1 and +2 Subject codes for Internal marks) விவரம் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

**2. வெற்று மதிப்பெண் பட்டியலை பதிவிறக்கம் செய்தல்**

பள்ளித் தலைமையாசிரியர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பெயர்பட்டியலில் இடம் பெற்றுள்ள தங்களது பள்ளி மாணவர்களது அகமதிப்பீட்டு மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான வெற்று மதிப்பெண் பட்டியல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும்.

**3.** **வெற்று மதிப்பெண் பட்டியலை பூர்த்தி செய்து, அக மதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல்**

பார்வை **3–**ல் காணும் செயல்முறைகளில் குறிப்பிட்டவாறு மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள **அகமதிப்பீடு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவத்தில் உள்ளவாறு,** ஒவ்வொரு பாடத்திற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களை, மேற்குறிப்பிட்டவாறு பதிவிறக்கம் செய்த மதிப்பெண் பட்டியலில் பதியவேண்டும். அதன் பின்னர், அம்மதிப்பெண்களை தலைமையாசிரியர் தங்களுக்கு வழங்கப்பட்ட USER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**பெயர்பட்டியலில் இடம் பெற்றுள்ள தங்கள் பள்ளி மாணவர்கள் அனைவரது அக மதிப்பீட்டு மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பள்ளி தலைமையாசிரியர் உறுதி செய்து கொள்ள வேண்டும். எந்த ஒரு மாணவரது மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்படாமல் இருத்தல் கூடாது.**

பூர்த்தி செய்யப்பட்ட மதிப்பெண்கள் பட்டியல்களை, பாடவாரியாகவும், பதிவெண் வாரியாகவும் அடுக்கி, +1 தேர்வு மற்றும் +2 தேர்வுக்கு தனித்தனி கட்டுகளாக கட்டி, அக்கட்டுக்களின்மீது கீழ்க்கண்ட விவரங்களை எழுத வேண்டும்.

**<u>HIGHER SECONDARY FIRST YEAR / SECOND YEAR EXAMINATION MAY 2022</u>**

**<u>MARK SHEETS OF INTERNAL MARKS</u>**

**1. Educational District No. & Name**
**2. School No. & Name**
**3. Register Numbers From ……….. To……….**
**4. Total number of candidates**
**5. Total number of mark sheets**
**6. Register numbers for which marks are not furnished, with reason**

**SIGNATURE OF THE HEADMASTER**
**WITH DATE AND SCHOOL SEAL**

4. அக மதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை பதிவு செய்த மதிப்பெண் பட்டியலை ஒப்படைத்தல்

பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் மேற்குறிப்பிட்டவாறு கட்டப்பட்ட மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கான அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் பட்டியல் கட்டுகளையும், உறுதிமொழிச் சான்றினையும் (மாதிரிச் சான்று இணைக்கப்பட்டுள்ளது) சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்தில் **20.04.2022–க்குள் ஒப்படைக்க வேண்டும்.** அதேபோன்று, மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் பட்டியல் கட்டுகளையும், உறுதிமொழிச் சான்றினையும் (மாதிரிச் சான்று இணைக்கப்பட்டுள்ளது) சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்தில் **21.04.2022–க்குள் ஒப்படைக்க வேண்டும்.**

மாவட்டக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்தும் +1 மற்றும் +2 அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் பதிவு செய்த படிவங்களை பெற்றுக் கொண்ட பின்னர், அவற்றை பள்ளி / பதிவெண் வாரியாக அடுக்கி, +1 தேர்வு மற்றும் +2 தேர்வு என தனித்தனி கட்டுகளாக கட்டி, மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கான கட்டுகளை **22.04.2022** அன்றும், மேல்நிலை முதலாம் ஆண்டிற்கான கட்டுகளை **23.04.2022** அன்றும், தனிநபர் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், அவற்றை பெற்றுக் கொண்டு தங்கள் வசம் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**இணைப்பு:**

1. பிற்சேர்க்கை
2. சான்றிதழ்
3. +1 and +2 Subject Codes for Internal Marks

ஒம்/–
**இயக்குநர்**

**பெறுநர்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்

– முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

   – தகவலுக்காகவும், பணியினை துரிதப்படுத்தவும் நகல் அனுப்பலாகிறது.

2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

   – உரிய நடவடிக்கைக்காக நகல் அனுப்பலாகிறது.

பிற்சேர்க்கை

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மே 2022**

**அகமதிப்பீட்டு மதிப்பெண்களை இணையதளம் மூலம்**
**பதிவு செய்வதற்கான கால அட்டவணை**

| வ.எண் | பணி | மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்விற்கான பணியினை மேற்கொள்ள வேண்டிய நாட்கள் | மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) தேர்விற்கான பணியினை மேற்கொள்ள வேண்டிய நாட்கள் |
|---|---|---|---|
| 01. | பள்ளித் தலைமையாசிரியர் அகமதிப்பீட்டு மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான வெற்று மதிப்பெண் பட்டியலை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் | 07.04.2022 முதல் 09.04.2022 வரை | 08.04.2022 முதல் 09.04.2022 வரை |
| 02. | பள்ளித் தலைமையாசிரியர் அகமதிப்பீட்டு மதிப்பெண்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் | 12.04.2022 முதல் 19.04.2022 வரை | 13.04.2022 முதல் 19.04.2022 வரை |
| 03. | பள்ளித் தலைமையாசிரியர் அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்களை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்தல் | 20.04.2022–க்குள் | 21.04.2022–க்குள் |
| 04. | மாவட்டக் கல்வி அலுவலர்கள் அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்களை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைத்தல் | 22.04.2022–க்குள் | 23.04.2022–க்குள் |

ஒம்/–
இயக்குநர்

## <u>சான்றிதழ்</u>

மே **2022**, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கான பெயர்பட்டியல்களில் இடம் பெற்றுள்ள எங்களது பள்ளி மாணவர்கள் அனைவரது அகமதிப்பீடு மதிப்பெண்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் பணி நிறைவடைந்தது எனச் சான்றளிக்கிறேன்.

இடம்: **தலைமையாசிரியர் கையொப்பம்**

**நாள்:** **பள்ளி முத்திரை**